மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2019-ம் வருடம் நவம்பர் மாதம் 29-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.எம்.நாகூர் மீரான் ஒலி, அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1

வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான மகாத்மா காந்தி பூங்காவில் நுழைவு கட்டணம் வசூலிக்காமல் பூங்காவினை பராமரித்தல் மற்றும் பூங்காவிற்குள் சிறிய அளவில் தேநீர், சிற்றுண்டி கடை வைத்து வியாபாரம் செய்தல், குத்தகை உரிமம் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்திட 13.11.2019 அன்று 3வது முறையாக மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி எவரும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், அன்றைய தினமே நடைபெற்ற பொது ஏலத்தில் கீழ்காணும் நபர்கள் மட்டும் கலந்துகொண்டனர்

| வ.எண் | இனம் | குத்தகைதாரர் பெயர்/முகவரி | கோரிய ஏலத் தொகை (ஒரு ஆண்டுக்கு) |
|---|---|---|---|
| 1 | மகாத்மா காந்தி பூங்கா | திருமதி. எஸ்.நந்தினி , 34.திருத்தனி தெத்து தெரு, வாலாஜாபேட்டை. | 30,000/- |
| 2 | | திரு.டி.பாஸ்கரன், பஞ்சுப்பேட்டை, வாலாஜாபேட்டை. | 29,000/- |

மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் வரிசை எண்:1-ல் கண்டுள்ள திருமதி.எஸ்.நந்தினி, அவர்கள் வருடத்திற்கு ரூ30,000/- கோரியுள்ள தொகை, வ.எண்:2-ல் கண்டுள்ள திரு.டி.பாஸ்கரன், அவர்களை விட அதிகபட்சமாக ஏலக் கேள்வி கேட்டுள்ளதால் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டிற்க்கான குத்தகை உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பொது ஏலத்தில் வரிசை எண்:1-ல் கண்டுள்ள திருமதி.எஸ்.நந்தினி, அவர்கள் வருடத்திற்கு ரூ30,000/- கோரியுள்ள தொகை, வ.எண்:2-ல் கண்டுள்ள திரு.டி.பாஸ்கரன், அவர்களை விட அதிகபட்ச ஏலம் கேட்டுள்ளதால் திருமதி. எஸ்.நந்தினி,34.திருத்தனி தெத்து தெரு, வாலாஜாபேட்டை அவர்களுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டிற்க்கான குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

3) ஏலம் விதிகளின்படி ஒப்படைக்கும் நாள் முதல் ஒவ்வொரு ஆண்டும் குத்தகை உரிமம் புதுப்பிக்கும் போது முதல் வருட தொகையில் 5%உயர்த்தி இரண்டாம் ஆண்டிற்கும் மற்றும் இரண்டாம் ஆண்டு தொகையில் 5% உயர்த்தி மூன்றாம் ஆண்டிற்கும் குத்தகை தொகையினை உயர்த்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0194/2019/அ1)

| | |
|---|---|
| 2 | இந்நகராட்சி நடைபெற்ற பணிகள் குறித்தும் மற்றும் சாதனைகள் குறித்தும் தினசரி நாளிதழ்களில் வெளியாகவுள்ள தொழில்மலர்களில் (நாளிதழுடன் இணைப்பு) 07.10.2019 முதல் 15.10.2019 வரையிலான விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை தினகரன் நாளிதழ் ரூ.8,921/-, தினமலர் நாளிதழ் ரூ.12,800/-, தினத்தந்தி நாளிதழ் ரூ.9,374/- தினமணி நாளிதழ் ரூ.9,450/-, மாலைமலர் நாளிதழ் ரூ.9,975/-, மாலைதமிழகம் நாளிதழ் ரூ.12,600/-, மற்றும் நமது அம்மா நாளிதழ் ரூ.8,950/- வரப்பெற்றதன் பேரில் மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் மேற்கண்ட நாளிதழ்களுக்கு உரிய தொகையினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2019-20ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட நாளிதழ்களுக்கு உரிய தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:1263/2019/இ1.) |
| 3 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகன எண்:**TN-73-D-2432-ஐ** சர்வீஸ் செய்வதற்காக ( **All Service and etc, Paid Service**) **Mahindra & Mahindra Limited** (JAIN CARS & AUTO SALES (P) LTD) வேலூார் அவர்களிடம் கட்டண சேவை செய்ததற்கும் மற்றும் அதற்கான செலவீனத் தொகை ரூ.55,015/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.2019-20ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.JAIN CARS & AUTO SALES (P) LTD., (**Mahindra & Mahindra Limited**) வேலூார்.09 அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:1660/2019/இ1.) |

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.